DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 340/2024

Prosecution witness – PW.1

| | | |
|---|---|---|
| Name | :திரு.உருவாட்டி | Caste: |
| Father's Name | : ராஜா | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

22.05.2026 – 11.02 AM

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

அரசு தரப்பில் முதல் விசாரணை:–

1. நான் கோவிலாங்குளத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு எதிரி எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் அரைக்காசு அம்மன் கோவில் உள்ளது. அந்த கோவிலின் அருகேதான் என் வீடும் உள்ளது. சுமார் 1 ½ வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் நான் வீட்டில் இருந்த போது போலிசார் என் வீட்டிற்கு வந்து மேற்படி கோவிலில் ஏதோ திருட்டு நடந்திருப்பதாக கூறி என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். அதனால் நானும் ஒரு வெள்ளை தாளில் போலிசாரிடம் கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ளகையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 1 குறியீடு செய்யப்படுகிறது. புகார் மனுவில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. கோவிலில் என்ன திருட்டு நடந்தது என்றும் எனக்கு தெரியாது.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. எனது வீட்டருகே உள்ள அரக்காசு அம்மன் கோவிலில் நான் சாமிகுப்பிட்டு விளக்கு போடுவது வழக்கும் என்றாலும், கடந்த 28.09.2024 ம்

தேதி காலை 06.00 மணியளவில் மேற்படி கோவிலுக்கு சென்று பார்த்த போது கோவிலில் உள்ள குத்துவிளக்கு மற்றும் இரண்டுமணிகளை காணவில்லை என்று தெரிந்துகொண்டு அக்கம் பக்கம் தேடி பார்த்தும் கிடைக்கவில்லை என்பதாகவும் அதன் மதிப்பு ரூ.1200 இருக்கும் என்பதாகவும், புகார் மனுவில் போலிசார் விசாரித்த போதும் சொல்லிவிட்டு தற்போது போலிசார் மிரட்டலுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.22 17:57:14 +0530